## கிட்டங்கிப் பிள்ளையார் மீது பொழிந்த

# தெய்வீக மலர்கள்



ஆக்கம்: வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கிட்டங்கிப் பிள்ளையார் கும்மிப்பாடல் | - | 5 - 9 |
| 2. | கிட்டங்கிப் பிள்ளையார் பத்து | - | 10 - 14 |
| 3. | கிட்டங்கிப் பிள்ளையார் சிந்து | - | 15 - 27 |
| 4. | கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல் | - | 28 - 31 |
| 5. | பஜனைப் பாடல் | - | 32 - 34 |
| 6. | விநாயகர் தனிப்பாடல் | - | 35 |


**கிட்டங்கிப் பிள்ளையார் மீது பொழிந்த**

*தெய்வீக மலர்கள்*

**ஆலய வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துகின்றோம்

எமது சேனைக்குடியிருப்பு நற்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்பர் வைரமுத்து கணேசன் அவர்கள் சிறந்த பக்தியுள்ளம் கொண்டவராக எம்மிடையே வாழ்ந்து வருபவர். அவருள்ளத்தில் நிறைவு கொண்டிருக்கும் இறைபக்தியின் காரணமாகத்தான் தெய்வப்பாடல்களை அவர் அதிகமாகப் பாடி வருகின்றார் என எமக்கு எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் அவரால் இயற்றப்பட்ட ஆலயங்கள் பலவற்றுக்கான பல பக்திப் பாடல்களை உள்ளடக்கிய பல புத்தகங்கள் எம் வசம் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

சேனைக்குடியிருப்பு கிட்டங்கிப்பிள்ளையார் மீது கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்கள் முன்பு கும்பாபிஷேகம் தொடர்பான பக்திப் பாடல்களைக் கொண்ட நூல் ஒன்றினை வெளியிட்டிருந்தார். நாம் அதிலுள்ள பாடல்களைப் பார்த்த பொழுது மிகவும் பெருமைப்பட்டோம். ஏனென்றால் இசையோடு பாடுவதற்கேற்ற மாதிரி பக்தி மனங்கமழும் விதத்தினிலே அவற்றினை இயற்றியிருந்தார். அப்பொழுதிருந்தே அவரது பக்திப்பாடல்களைப் புனைகின்ற ஆற்றலை நாம் அறிந்திருந்தோம். தற்பொழுது கிட்டங்கிப் பிள்ளையார் மீது பல பாடல் வகைகளைக் கொண்ட அவரது புத்தகம் ஒன்றினை எங்களது பரிபாலன சபையினால் ஆலயத்திலே வெளியிட்டு பெருமானை முன்னிறுத்தியே நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இப்புத்தகத்துக்கு "கிட்டாங்கிப் பிள்ளையார் மீது பொழிந்த தெய்வீக மலர்கள்" என நாமம் சூட்டப்பட்டிருக்கின்றது.

கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்கள் பல்லாண்டு காலங்கள் சீரோடும், சிறப்போடும், வாழ்ந்து தெய்வங்கள் மீது மென்மேலும் பல பக்திப்பாடல்களை இயற்றுவதற்கு எல்லாம் வல்லவரான கிட்டங்கிப் பிள்ளையார் அருள்புரிய வேண்டுமென வேண்டுவதோடு, அவரது புலமையையும், திறமையையும் இவ்வேளை வாழ்த்துவதில் நாங்கள் அனைவரும் பெருமை கொள்கின்றோம்.

*ஆலய பரிபாலன சபையினர்*

**சேனைக்குடியிருப்பு கிட்டங்கி பிள்ளையார் ஆலயம்**

கிட்டங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்களின் இன்னுமொரு நூல் "கிட்டங்கிப் பிள்ளையார் மீது பொழிந்த தெய்வீக மலர்கள்" இப்போது வெளிவருகின்றது. இது அவருடைய கவித்துவத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

நான் முன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆலய நிர்வாகத்தினர் அவரது திறமையை நன்கு பயன்படுத்துகின்றனர் என்பது புலனாகின்றது. இன்னும் சில ஆலயங்களின் வேண்டுகோள்கள் அவர் கைவசம் இருப்பதையும் அறிந்து மகிழ்கின்றேன். அவருடைய எதிர்காலம் பிரகாசமாக இருப்பது எனது கண்முன் விரிக்கின்றது.

திரு.வைரமுத்து கணேசன் போன்ற திறமைசாலிகளை பிறர் பயன்படுத்திக் கொள்வது சிறந்ததே. அதனால், அவர் வளர்ச்சி அடைவதுடன் சிறப்பான முன்னேற்றமும் சிறந்த வெளியீடுகளும் வெளிவரக் காரணமாக இருக்கும்.

கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்களது நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன். வாழ்க கணேசன் அவர்கள்! வளர்க அவர் தம் பணி.

அன்புடன்
**முகில்வண்ணன்**

*கலாபூஷணம் வே.சண்முகநாதன் ஜே.பி.*
"**இலக்கிய பவன்**"
இல.49, நெசவு நிலைய வீதி,
பாண்டிருப்பு-01,
கல்முனை. 32300



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கலியுகத்திலே பாடல்கள் இசைத்து இறைவனை வழிபடுவது முக்கியம் பெறுகின்றது. சுவாமி இராமகிருஷ்ண பரம ஹம்சர் "கைகொட்டி பஜனை செய்தால் பாவப்பறவைகள் பறந்து போகும்" என எமக்குப் போதித்து இருக்கின்றார். அமைதியான இச்சூழலிலே, தற்பொழுது ஆலயங்கள் தோறும் இசைப்பாடல்கள் பஜனை மூலம் வெளிவருவதை நாம் பார்த்தும், கேட்டும் வருகின்றோம்.

இந்த வகையிலே கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்கள் பல வருடங்களாக தெய்வங்கள் மீது பாடல்களைப் பாடி வருகின்றார். தற்பொழுதும் "கிட்டங்கிப் பிள்ளையார் மீது பொழிந்த தெய்வீக மலர்கள்" என்னும் பெயரிலே பாடல்களை உருவாக்கி நூல் வடிவிலே வெளியிட முனைந்தது வாழ்த்துதலுக்கும் போற்றுத லுக்குமுரிய பெருவிடயமாகும்.

இந்நூலிலே "கிட்டங்கிப் பிள்ளையார் கும்மிப்பாடல்", "கிட்டங்கிப் பிள்ளையார் பத்து", கிட்டங்கிப் பிள்ளையார் பொன்னூஞ்சல்", கிட்டங்கிப் பிள்ளையார் சிந்து" என நான்கு வகைப் பாடல்கள் இடம் பெறுகின்றன. அனைத்துப் பாடல்களும் ஆண்டவனை நினைத்து உள்ளம் உருகி, இசையோடு பாடும் முறையிலே எழுதப்பட்டிருக்கின்றன. அன்புக்கும், பண்புக்குமுரிய கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்களது இப்பாடல்களை நாம் எமது வீடுகளிலும் ஆலயங்களிலும் பாடி இறைவனது பேரருளைப் பெற வேண்டும் என்பதோடு, மென்மேலும் இம்முயற்சியிலே அவர் வெற்றி காண வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி கவிஞர் அவர்களை வாழ்த்துவதிலும் மனநிறைவு கொள்கின்றேன்.


*அன்புடன்*

**பாவாணர் அக்கரைப்பாக்கியன்**

பெரியநீலாவணை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிட்டங்கிப் பிள்ளையார் கும்மிப் பாடல்

## காப்பு

ஆனைமுகனே அருட்கடலே – புவி
அனைத்துயிர்க்கும் முழுமுதலே
சேனையூர்க் கிட்டங்கிப் பதியுறையும் – எங்கள்
செல்வக்கணபதி காப்பாமே.

தாயேகலைவாணி வாருமம்மா – சில
தத்துவ முத்துக்கள் தாருமம்மா
பாயிரம்கேட்டு அகமகிழ – நீயும்
பக்கத்தில் வந்து அமருமம்மா

## - நூல் -

1. ஆற்றோரம் காற்றாட வீற்றிருக்கும் – எங்கள்
அப்பன் கிட்டங்கிப் பிள்ளையாரு
பற்றோடு வீதியுலா வாறார் – நம்ம
பழம்தமிழர் பதி காண்பதற்கு

2. வட்டையருகில் அமர்ந்திருந்து – செல்வம்
வாரிச் சொரிந்து அருள் வழங்கும்
கிட்டங்கிப் பிள்ளையார் வீதியுலா – காண
கூட்டமாய்க் கூடி வாருங்கடி

3. ஆற்றோரம் தென்றல் தாலாட்ட – சிம்
மாசனம் போட்டு அமர்ந்திருந்து
சுற்றி ஊர்வலம் காண்பதற்கு – இப்போ
சுகமாய்த் தேரேறி வாறாரடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாதையருகில் அமர்ந்திருந்து - தன்னை
பார்ப்போர் கேட்போர் தனையறிந்து
கதைத்துப்பேச வாறாரென்று - இப்போ
கன்னித்தமிழ்க் கும்மி கொட்டுங்கடி

5. ஆண்டுக்கு ஆண்டு படியுயர்வு - கண்டு
ஆனந்தமாய் மக்கள் வாழ்வதனை
கண்டுகளித்திட வேண்டுமென்று - இப்போ
கணபதி தேரேறி வாறாரடி

6. ஆலம்பழம் போன்ற நம்மனதை - பெண்ணே
அமுக்கமாய் என்றும் வையாமல்
பாலும் பழமும் போல் ஒன்றாகிப் - பெண்ணே
பைந்தமிழ்க் கும்மி கொட்டுங்கடி

7. மரகத மணித்தேரேறி - இன்று
மக்கள் மனை தோறும் காண்பதற்கு
பரமன் புத்திரன் வாறாரென்று - இப்போ
பைங்கிளியே கும்மி கொட்டுங்கடி

8. மட்டிலா மகிழ்ச்சி மேலோங்க - இன்று
வண்ணமணி ரதம் மீதேறி
கிட்டங்கிப் பிள்ளையார் வாறாரென்று - சொல்லி
கிளிமொழியே கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கூரைக்கு கீழே வீடுஉண்டு – பெண்ணே
குடிலுக்மேலே கீத்துமுண்டு
சூரையில் பட்ட துணிநோவைத் – தீர்க்க
சுந்தரத் தேரேறி வாறாரடி

10. பாருக்குள் எத்தனை மேடுபள்ளம் – இந்த
பாதையில் எத்தனை குண்டுகுழி
நாருடன் சேர்ந்த மலர் போல – இன்று
நட்புடன் வாழ்வதைப் பாருங்கடி

11. கோடையிலும் மழை தான்பொழிந்து – மக்கள்
குதூகலத்தோடு சிறந்தோங்க
ஆடை அணிகலன் தானணிந்து – எங்கள்
ஆனைமுகன் வாறார் பாருங்கடி

12. கேட்டவர மெல்லாம் தந்துவிட்டு – நாம்
கேளாத துன்பத்தை போக்குதற்கு
கிட்டங்கிப் பிள்ளையார் வாறாரடி – பெண்ணே
கீர்த்தி பலவும் நல்குதற்கு

13. ஆயிரம் கோடிப் பிரகாசம் – கொண்ட
ஐங்கரத் தானின் திருக்கோலம்
வாய்விட்டு எப்படிக் கூறுவது – என்று
வஞ்சியரே கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஒன்பதோ டொன்பதை கூட்டிவைத்தால் – அது
ஒன்பது ஆவது போல இன்று
இன்பத்தைக் காட்டி இடமர்த்த – இன்று
இன்முகத் தோடு வாறாரடி

15. எட்டாக்கனிக்கு கொட்டாவி – நரி
விட்டதுபோல நினையாமல்
தொட்டது எல்லாம் துலங்கவைக்க – நம்ம
கிட்டங்கிப் பிள்ளையார் வாறாரடி

16. ஒன்பது வாசல் கோட்டையிது – என்றோ
ஒன்றாகச் செயல் நிற்குமுன்னே
எண்ணத்தில் மூத்தவன் தோன்றிவிட்டால் – நமக்
கெல்லா நன்மையும் கிட்டுமடி.

17. விதைக்குள்ளே மரமொன் றிருக்கிறதை – அன்று
கதையிலே நீயும் படித்தது போல்
கதைக்குள்ளிருக்கின்ற மனம் திறந்து – நீயும்
சற்று அவனைத் துதியுமடி

18. புளிமா மரமாம் எங்கள் மதம் – அதில்
புதிதாய் ஒட்டிய கிளைகளெல்லாம்
வழிகாட்ட நமக்கு வருகுதென்று – சொல்லி
வஞ்சியரே கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஓய்வின்றி உழைத்துச் சேர்த்துழைத்து – என்றோ
பாயிலே நோயால் படுக்குமுன்னே
வாய்விட்டு கிட்டங்கிப் பிள்ளையாரை – நீயும்
வாழ்த்தி வணங்கிப் பணியுமடி

20. காமக் குரோதம் அணுகாமல் – பெண்ணே
கசடு நெஞ்சிலே வையாமல்
கோமகன் கிட்டங்கிப் பிள்ளையாரை – எண்ணி
கொஞ்சும் தமிழ்க்கும்மி கொட்டுங்கடி

***************


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிட்டங்கிப் பிள்ளையார் பத்து

கருணைக் கடலாக என்றும் வீற்றிருந்து
காசினியில் காட்சிதனைக் கண்டிருக்கும்
கருப்பொருளே கிட்டங்கிப் பிள்ளையாரே
காதலுடன் உன் பாதம் நான் பணிந்தேன்
குருவாக முன் வந்து அமர வேணும்
குஞ்சரனே உன்புகழ் பாடுதற்கு
அருட்கடலே கிட்டங்கிப் பிள்ளையாரே
அன்பனேமுன்னின்று அருள் செய்வாயே.

காசினியில் வாழ்கின்ற உயிர்கள் தன்னை
காத்தருளும் தெய்வமென வந்தமர்ந்து
மாசில்லா வாழ்வழித்து மகிழ்ச்சியூட்டும்
மால்மருகா கிட்டங்கிப் பிள்ளையாரே
தேசிகனே உள் மனதில் அமர்ந்திருந்து
தெள்ளுதமிழ் கவிதைமழை தினம் பொழியும்
மூசிகனே கிட்டங்கிப் பிள்ளையாரே
முதல்வோனே முன்னின்று அருள்செய்வாயே

கிட்டங்கிப் பெருவாவிக் கரையமர்ந்து
கிட்டுவது சிறு அறுகோ ஏற்றுக்கொண்டு
அட்டதிக்கும் அனைத்துயிரும் காத்தருளும்
ஆனைமுகா கிட்டங்கிப் பிள்ளையாரே
எட்டாதோ உன்கிருபை என்று நித்தம்
ஏங்கியே தவிப்போரின் துயர்களையும்
கிட்டங்கிப் பிள்ளையாரே உனைப்பணிந்தேன்
கிருபைக்கடலே மனமிரங்கி அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீறுபட்டுவிலகாத நீர்க்கரையில்
கிலேசமின்றி ஒய்யாரமா யமர்ந்து
கூறுகின்ற தமிழ்கேட்டுக் குதூகலிக்கும்
குஞ்சரனே கிட்டங்கிப் பிள்ளையாரே
ஆறுமனம் ஓர்மனதாய் வைத்திருந்து
அன்றாடம் துதிப்போர்க்கு அருள்வழங்கும்
வீறுடைய கிட்டங்கிப் பிள்ளையாரே
விநாயகனே மனமிரங்கி அருள் செய்வாயே.

குப்பையிலே குண்டுமணி கிடந்திட்டாலும்
குதூகலம் மாறாமல் ஜொலிப்பதுபோல்
எப்போதும் எங்கள்குலம் காக்கவென்று
எழில் கொஞ்சும் கிட்டங்கிப் பதியமர்ந்து
தப்பாமல் உன்நாமம் துதிப்போர்மீது
தயவுடனே எப்போதும் கருணைகாட்டும்
அப்பனே கிட்டங்கிப் பிள்ளையாரே
அருட்கடலே மனமிரங்கி அருள்செய்வாயே

கூட்டமாய் அடியவர்கள் ஒன்றாய்க்கூடி
குணபதியே உன்புகழை பாடிப்பாடி
ஆட்டமிட்டு ஆனந்தம் கொள்கின்றார்கள்
அப்பனே உனது அருள் கிடைக்குமென்று
நாட்டமுடன் நல்லருள் நீ வழங்கி
நாள்தோறும் எம்மீது கருணைகாட்டும்
கிட்டங்கிப் பிள்ளையாரே உனைப்பணிந்தேன்
கிருபையுடன் மனமிரங்கி அருள்செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சுகின்றார் பக்தரெலாம் மெய்யுருகி
கேட்டவரம் இப்போதே கிடைக்குமென்று
அஞ்சுகமே அருட்சோதி வடிவே யெங்கள்
அருட்கடலே கிட்டங்கிப் பிள்ளையாரே
கொஞ்சம் நீ மனது எம் மேல் வைக்க வேணும்
குறையகற்றி நிறைவாழ்வு தரவும் வேணும்
வஞ்சமிலா கிட்டங்கிப் பதியமர்ந்த
வாழ்பதியே மனமிரங்கி அருள் செய்வாயே.

கேள்வியிலே பதிலெல்லாம் அடக்கிவைத்த
கீர்த்திபெறு விநாயக மூர்த்தி தன்னை
நாள்தோறும் இடைவிடா நினைப்பவர்க்கு
நலமருள கிட்டங்கிப் பதியமர்ந்து
வாழ்வுயர எப்போதும் வரங்கள் நல்கும்
வல்லப கணபதியாய் அமர்ந்திருக்கும்
வாழ்பதியாம் கிட்டங்கிப் பிள்ளையாரே
வந்தித்தோம் மனமிரங்கி அருள்செய்வாயே.

கையிலே மோதகத்தை எடுத்துக்கொண்டு
கருத்துக்கு இது ஒன்றே போதுமென்று
வையகமே அதனுள்ளே அடக்க மென்று
வைத்திருக்கும் கிட்டங்கிப் பிள்ளையாரே
ஐங்கரனே அருட்சோதி மணி விளக்கே
அங்குசனே அடியார்க்கு அருள்வழங்க
மெய்யாகக் கிட்டங்கிப் பதியமர்ந்த
வித்தகனே மனமிரங்கி அருள் செய்வாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சும்கிளி புள்ளினங்கள் கீதம்பாட
கோட்டானும் நாரையும் நடனமாட
பஞ்சுமலர்த் தாமரைகள் மலர்ந்து நிற்க
பால் பொழியக் கறவையினம் காத்திருக்க
நெஞ்சுருகி அடியார்கள் ஆடிப்பாட
நேசமுடன் செவி குளிரக் கேட்டிருக்கும்
குஞ்சரனே கிட்டங்கிப் பிள்ளையாரே
குலக் கொழுந்தே மனமிரங்கி அருள் செய்வாயே

கோயிலிலே கருவறை இருந்திட்டாலும்
கோபுரம்தான் வானுயர வளர்ந்திட்டாலும்
வாயினிக்க உன்நாமம் உரைப்போர்நெஞ்சில்
வந்தமரும் கிட்டங்கிப் பிள்ளையாரே
தாயாகி தந்தையாய் என்றும் காக்கும்
தயாநிதியே தந்திமுகா இன்று எங்கள்
வாவிக்கரை கிட்டங்கிப் பதியமர்ந்த
வடிவழகே மனமிரங்கி அருள்செய்வாயே.

கௌமாரி பெற்றெடுத்த முதல்வா எங்கள்
கற்பகமே கிட்டங்கிப் பிள்ளையாரே
ஔவையை கைலாயம் சேர்த்துவைத்த
ஆனைமுகா எங்கள் குறை தீர்த்துவைத்து
செவ்வையாய் சுகவாழ்வு என்றும் நல்கி
செந்தமிழும் சைவமும் தழைக்கவைக்கும்
திவ்வியனே கிட்டங்கிப் பிள்ளையாரே
திருமால் மருகா மனமிரங்கி அருள்செய்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவியில் அமர்ந்துகொள்ள இதுதான் நல்ல
இடமென்று கிட்டங்கிப் பதியமர்ந்து
விக்கினங்கள் தீர்த்துவைத்து வினையகற்றும்
வேழமுகா உன்பாதம் தினம்பணிந்தோம்
சிக்கல்பல நீக்கிவைத்து திருப்தியோடு
சீரான நல்வாழ்வு என்றும் நல்க
எக்காலும் கிட்டங்கிப் பதியமர்ந்த
எழில் வடிவே மனமிரங்கி அருள்செய்வாயே.

***************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கிட்டாங்கிப் பிள்ளையார் சிந்து

01. ஆற்றோர மேடையிலே பிள்ளையாரே
அமர்ந்திருந்து அருள்வழங்கும் பிள்ளையாரே
ஊற்றெடுக்கும் பக்தியினால் பிள்ளையாரே
உளமுருகிப் பாடுகின்றேன் பிள்ளையாரே (பிள்ளையாரே)

02. நாவினிலே வந்தமர்ந்து பிள்ளையாரே
நல்லவரம் தாருமையா பிள்ளையாரே
பூவினிலே அமர்பவரே பிள்ளையாரே
புதுநிறைவு தாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

03. ஆலயத்தின் முன்னமரும் பிள்ளையாரே
அனைவர்க்கும் முழுமுதலே பிள்ளையாரே
காலம் நேரம் தவறாமல் பிள்ளையாரே
கருத்தினிலே அமருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

04. வட்டையோரம் வந்தமர்ந்த பிள்ளையாரே
வள்ளலெங்கள் கணபதியாம் பிள்ளையாரே
கிட்டாங்கிப் பதியமர்ந்தாய் பிள்ளையாரே
கிருபைதர வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

05. ஊர்வலமாய் நாம் போகப் பிள்ளையாரே
உளமகிழ்ந்து வாருமையா பிள்ளையாரே
தேரேறி அமர்ந்து நீயும் பிள்ளையாரே
தெருவெல்லாம் பாக்கவேணும் பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பல வீதி பார்க்க வேண்டும் பிள்ளையாரே
பாக்கியமும் கொடுக்க வேண்டும் பிள்ளையாரே
தலம் விட்டு வாருமையா பிள்ளையாரே
தத்துவத்தின் வித்தகனே பிள்ளையாரே (பிள்ளையாரே)

07. மனமார உன் நாமம் பிள்ளையாரே
மகிழ்வோடு துதிப்போர்க்கு பிள்ளையாரே
உனது அருள் நீ கொடுத்து பிள்ளையாரே
ஊர்வலமாய் வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

08. பூரண கும்பமையா பிள்ளையாரே
புதுப்பொலிவு வீதியெல்லாம் பிள்ளையாரே
தோரணமும் மின்விளக்கும் பிள்ளையாரே
தொங்குதையா வீதியெல்லாம் பிள்ளையாரே (பிள்ளையாரே)

09. அன்னைதிருக் கோலம் கண்டு பிள்ளையாரே
ஆசிபெற்று நீதிரும் பிப் பிள்ளையாரே
இன்னும் பல தெருக்கள் பிள்ளையாரே
இனிதாய் பார்க்க வென்று பிள்ளையாரே (பிள்ளையாரே)

10. வாருமையா போய் வருவோம் பிள்ளையாரே
வண்ணமணித் தேரேறிப் பிள்ளையாரே
பாருமையா கண் திறந்து பிள்ளையாரே
பாதை இருமருங்கும் பிள்ளையாரே (பிள்ளையாரே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. குரவை வெடியோசை பிள்ளையாரே
குதூகலிக்கும் ஒயிலாட்டம் பிள்ளையாரே
அரகரா ஓசை கேட்டுப் பிள்ளையாரே
அருள் மழை பொழிய வேண்டும் பிள்ளையாரே (பிள்ளையாரே)

12. ஆயிரம் கோடிமுறை பிள்ளையாரே
அணுவளவும் பிசகாமல் பிள்ளையாரே
பாயிரமும் ஓதுவார்கள் பிள்ளையாரே
பக்தி ததும்பிடவும் பிள்ளையாரே (பிள்ளையாரே)

13. ஊரிலுள்ள வீதி யெல்லாம் பிள்ளையாரே
உற்று நோக்கி நீ பார்த்து பிள்ளையாரே
பேரின்பப் பெருவாழ்வு பிள்ளையாரே
பேதமின்றி வழங்குமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

14. வாணவெடி மூலவெடி பிள்ளையாரே
வானைப் பிழக்குதுபார் பிள்ளையாரே
காணாத காட்சியென்று பிள்ளையாரே
கரம் கூப்பிப் பணிவதைப்பார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

15. எப்பவும் இப்படியே பிள்ளையாரே
எங்களுக்குக் காட்சிதந்து பிள்ளையாரே
தப்பாமல் காத்தருளும் பிள்ளையாரே
தலை தாழ்த்தி வணங்குகின்றோம் பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. முறையீடு தான் கேட்டு பிள்ளையாரே
முக்தி தருவேனென்று பிள்ளையாரே
முறையிட்டோம் உன்முன்னே பிள்ளையாரே
மூசிக வாகனரே பிள்ளையாரே (பிள்ளையாரே)

17. தங்கமணித் தேரேறிப் பிள்ளையாரே
தகதககென்ற மின்னொழியில் பிள்ளையாரே
ஐங்கரனார் வரும்காட்சி பிள்ளையாரே
அங்கம் சிலிர்க்குதையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

18. எங்கும் நிறைந்தவரே பிள்ளையாரே
ஏழைநெஞ்சில் நிறைந்தவரே பிள்ளையாரே
கங்காதரன் மகனே பிள்ளையாரே
காத்தருள வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

19. கரியமுகில் மேனியனார் பிள்ளையாரே
கண்ணிறைந்த மருமகனே பிள்ளையாரே
கரியானை மாமுகனே பிள்ளையாரே
கைகூப்பி நாம்பணிந்தோம் பிள்ளையாரே (பிள்ளையாரே)

20. வேல் முருகன் சோதரனே பிள்ளையாரே
வேழமுகத்தையாவே பிள்ளையாரே
பால்போல மனம் கொண்ட பிள்ளையாரே
பக்தர்தமைக் காருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கலைமகள் வீதி பார்த்துப் பிள்ளையாரே
கருணை வழங்குதற்கு பிள்ளையாரே
தலைமகனே வாருமென்று பிள்ளையாரே
தலைதாழ்த்தி வணங்குகின்றோம் பிள்ளையாரே (பிள்ளையாரே)

22. அரோகரா ஓசைகேட்டால் பிள்ளையாரே
ஆனந்தம் பெருகுதையா பிள்ளையாரே
குரவை முழக்கமிட்டு பிள்ளையாரே
குதுகலம் காண்பதைப்பார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

23. தாகசாந்தி செய்ய வென்று பிள்ளையாரே
தழராத மனது கொண்டு பிள்ளையாரே
ஆகாரம் அன்னதானம் பிள்ளையாரே
அள்ளிக் கொடுப்பதைப்பார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

24. சாரிசாரியாய் பக்தர் பிள்ளையாரே
சந்தோஷம் மேலோங்கப் பிள்ளையாரே
ஆரிருக்கார் துணையென்று பிள்ளையாரே
அப்பா உனைப் பணிவார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

25. உள்ளமறிந்து நீயும் பிள்ளையாரே
உளமார வரமீந்து பிள்ளையாரே
கள்ளமனம் கொண்டவர்க்கும் பிள்ளையாரே
கருணை வழங்குமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. வீதியிருமருங்கும் பிள்ளையாரே
விழாக்கோலம் பூண்டிருக்கு பிள்ளையாரே
சோதி வடிவானவரே பிள்ளையாரே
சுடரொளியைக் காட்டுமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

27. பணத்துக்கு ஆசைப்பட்டு பிள்ளையாரே
பலரறியாக் கணக்குவைத்து பிள்ளையாரே
இணக்கிய வீதியிலே பிள்ளையாரே
இப்போது வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

28. மக்கள் மனக்குறையை பிள்ளையாரே
மனக் கண்ணாய் நீ பார்த்துப் பிள்ளையாரே
சிக்கலெல்லாம் நீ பார்த்துப் பிள்ளையாரே
சித்தி புத்தி விநாயகனே பிள்ளையாரே (பிள்ளையாரே)

29. வாய்ப் பேச்சில் வல்லவர்கள் பிள்ளையாரே
வந்து நின்று கரம் கூப்பி பிள்ளையாரே
தாயென்று உனை நம்பிப் பிள்ளையாரே
தலை தாழ்த்தி நிற்பதைப்பார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

30. உன் வரவை எதிர்பார்த்து பிள்ளையாரே
உறங்காமல் விழித்திருந்து பிள்ளையாரே
உன்வரவை கண்டதுமே பிள்ளையாரே
உளமுருகி நிற்பதைப் பார் பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. குத்துவிளக்கு வைத்து பிள்ளையாரே
குடத்து நிறை முட்டி வைத்து பிள்ளையாரே
வித்தகனே உன்நாமம் பிள்ளையாரே
விரும்பியுரைப் பதைப்பார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

32. பொங்கல் அவல் கடலை பிள்ளையாரே
பூரித்து உண்பவரே பிள்ளையாரே
மங்கள வாழ்வளிக்கப் பிள்ளையாரே
மன நிறைவாய் வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

33. மண்ணுன்டோன் மருகனே நீ பிள்ளையாரே
மக்கள் துயர் தீர்ப்பதற்கு பிள்ளையாரே
கண்திறந்து பாருமையா பிள்ளையாரே
கற்பகமே அற்புதமே பிள்ளையாரே (பிள்ளையாரே)

34. சிவகாமி விநாயகனே பிள்ளையாரே
சித்தி புத்தி விநாயகனே பிள்ளையாரே
நவசக்தி நாயகனே பிள்ளையாரே
நம்பினோரைக் காருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

35. உள்ளம் கவர்ந்திழுக்கப் பிள்ளையாரே
ஊரெல்லாம் பார்த்து வந்து பிள்ளையாரே
கள்ளமில்லா மனமறிந்து பிள்ளையாரே
கருணை வழங்குமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கள்ளமில்லாத நாமம் பிள்ளையாரே
கருணை நிறைந்த நாமம் பிள்ளையாரே
உள்ளம் இனிக்கும் நாமம் பிள்ளையாரே
உத்தமியாள் நாமம் பெற்ற பிள்ளையாரே (பிள்ளையாரே)

37. சந்திக்குச் சந்தியிலே பிள்ளையாரே
சந்தோஷ வெடியோசை பிள்ளையாரே
முந்தி முந்தி வெடிக்குதையா பிள்ளையாரே
முக்கணனார் புத்திரனே பிள்ளையாரே (பிள்ளையாரே)

38. தொந்தி வயிற்றோனே பிள்ளையாரே
தொழுதார் துயர் துடைக்கப் பிள்ளையாரே
வந்திருக்காய் என நினைத்துப் பிள்ளையாரே
வாழ்த்தி வணங்குகின்றார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

39. ஒற்றைகொம்பனே பிள்ளையாரே
ஓங்கார வித்தகனே பிள்ளையாரே
வற்றாத வாவியோரம் பிள்ளையாரே
வந்துகுடி கொண்டவனே பிள்ளையாரே (பிள்ளையாரே)

40. ஆண்டுக்கு ஆண்டு அப்பா பிள்ளையாரே
அருள்வழங்க ஊருசுற்றிப் பிள்ளையாரே
வேண்டுமென்ற வரம் கொடுத்த பிள்ளையாரே
வித்தகனே இப்போது பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. உறைவிடத்தை நோக்கி வந்து பிள்ளையாரே
உன்பதியில் அமருமையா பிள்ளையாரே
துறைபடியாம் கிட்டங்கி பிள்ளையாரே
துயர் நீக்கும் பதியமர்வாய் பிள்ளையாரே (பிள்ளையாரே)

42. அதிகாலை வாவியிலே பிள்ளையாரே
அடியவரோடு கூடிப் பிள்ளையாரே
விதிவெல்ல வினைகளைப் பிள்ளையாரே
விருப்போடு தீர்த்த மாடிப் பிள்ளையாரே (பிள்ளையாரே)

43. பொன்னான பொன்னூஞ்சல் பிள்ளையாரே
பொற்பலகை மீதமர்ந்து பிள்ளையாரே
கண்ணான பாடல் கேட்டுப் பிள்ளையாரே
கருணை மழை பொழியுமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

01. சோமநாதன் தன்மகனே பிள்ளையாரே
சோதிவடி வானவரே பிள்ளையாரே
சேமன்வீதி பார்க்கவேண்டும் பிள்ளையாரே
செல்வம் அள்ளி வழங்கவேண்டும் பிள்ளையாரே (பிள்ளையாரே)

02. அன்னை முத்துமாரியம்மன் பிள்ளையாரே
அழகான கோயில் கொண்டு பிள்ளையாரே
தன்னை நம்பி வருவோர்க்கு பிள்ளையாரே
தரிசனம் தருவாளாம் பிள்ளையாரே (பிள்ளையாரே)

03. அம்மை பாதம் தான் பணிந்து
ஆசிபெற்று நீதிரும்பிப் பிள்ளையாரே
உம்மை நம்பி இருப்போரை பிள்ளையாரே
உற்று நோக்கிப் பாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

04. ஆடி அசைந்து வரும் பிள்ளையாரே
அருள் வழங்கப் போவதற்கு பிள்ளையாரே
பாடசாலை வீதியையும் பிள்ளையாரே
பார்த்து வரவேணுமப்பா பிள்ளையாரே (பிள்ளையாரே)

05. காயத்தை விட்டவர்கள் பிள்ளையாரே
கடுகிவந்து சேர்ந்துவிட்டால் பிள்ளையாரே
மாயமாய் மறையுமிடம் பிள்ளையாரே
மயானக் கரைபாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. நல்ல நல்ல வரம் கொடுக்க பிள்ளையாரே
நடுக்காட்டில் அமர்ந்திருக்கும் பிள்ளையாரே
செல்லப் பிள்ளையார் பதியை பிள்ளையாரே
சென்று பார்த்து வரவேணும் பிள்ளையாரே (பிள்ளையாரே)

07. கம்பத்தில் அன்று நின்று பிள்ளையாரே
கடும்தவம் பெற்றுவந்த பிள்ளையாரே
அம்மை காமாட்சிவீதி பிள்ளையாரே
அப்பா நீ பார்க்க வேண்டும் பிள்ளையாரே (பிள்ளையாரே)

08. மெயின் வீதி தன்னிலேதான் பிள்ளையாரே
மெள்ள மெள்ள வாருமையா பிள்ளையாரே
அயராது அருள் வழங்க பிள்ளையாரே
ஆடியசைந்து வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

09. காளியம்மன் வீதியிலே பிள்ளையாரே
கரிசனையா நீ நடந்து பிள்ளையாரே
மாளிகையைப் பார்க்கவென்று பிள்ளையாரே
மன நிறைவாய் வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

10. காவலென்று உன் நாமம் பிள்ளையாரே
கணநேரம் மறவாமல் பிள்ளையாரே
நாவலர் வீதியில்தான் பிள்ளையாரே
நாள்தோறும் துதிப்பார்கள் பிள்ளையாரே (பிள்ளையாரே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பாரதி வீதியையும் பிள்ளையாரே
பார்த்து வரவேணுமென்று பிள்ளையாரே
போக வாருமென்று பிள்ளையாரே
நெஞ்சுருகி அழைக்கின்றார் பிள்ளையாரே (பிள்ளையாரே)

12. மாரியம்மன் கோயில் வீதி பிள்ளையாரே
மக்கள் நிறைந்த வீதி பிள்ளையாரே
காரிகையாள் வாழும் வீதி பிள்ளையாரே
கடைக் கண்ணால் பாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

13. நாலாபுற வீதியெல்லாம் பிள்ளையாரே
நல்லபடி சுற்றி வந்தாய் பிள்ளையாரே
பலாவடி வீதி பார்க்கப் பிள்ளையாரே
பக்கத்துணைவாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

14. ஓடை உடைந்த வீதி பிள்ளையாரே
ஒல்லாந்தர் காலவீதி பிள்ளையாரே
ஆடை கிழியும் வீதி பிள்ளையாரே
அவதானம் தேவையப்பா பிள்ளையாரே (பிள்ளையாரே)

15. மெள்ள மெள்ள போவோம் பிள்ளையாரே
மேலும் பல வீதி பார்க்கப் பிள்ளையாரே
உள்ளம் கவர் வீதியெல்லாம் பிள்ளையாரே
உற்று நோக்கிப் பார்த்து வந்தாய் பிள்ளையாரே (பிள்ளையாரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அள்ளி அருள் வழங்கும் பிள்ளையாரே
ஆனைமுகன் வாழ்பதியாம் பிள்ளையாரே
பிள்ளையாரே கோயில் வீதி பிள்ளையாரே
பிழையின்றிப் பார்க்க வேண்டும் பிள்ளையாரே (பிள்ளையாரே)

17. மத்திய வீதி பார்க்கப் பிள்ளையாரே
மனமகிழ்ந்து வாருமையா பிள்ளையாரே
நித்தமும் உன் நினைவு பிள்ளையாரே
நினைவில் வைக்கும் பக்தருண்டு பிள்ளையாரே (பிள்ளையாரே)

18. தேவார வேத ஒலி பிள்ளையாரே
தெவிட்டாமல் தினம் முழங்கும் பிள்ளையாரே
மாவடி வீதி பார்க்கப் பிள்ளையாரே
மகிழ்வோடு வாருமையா பிள்ளையாரே (பிள்ளையாரே)

***************


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
விநாயகர் துணை

# கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்

01. வற்றாதவாவிக் கரையோரம் வந்தமர்ந்து
நற்பேறருழும் நாதா கணத்தலைவா
பற்றோடு உன்தன் பாதம்தனைப் பணிந்து
சொற்றமிழால் நின்புகழை தூயவனே நான்பாட
அட்டதிக்கும் போற்றும் ஆனைமுகம் கொண்டவரே
மட்டில்லா நற்கவிதை மால்மருகா நீயருள
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடிரோபொன்னூஞ்சல்

02. அன்னை சரஸ்வதியே அழகுமிகு தேவியரே
உன்தன் அடிபணிந்தேன் உள்ளத்து உள்ளமர்ந்து
பொன்னான நற்கவிதை பூமகளே நீயளித்தால்
என்னாமும் செந்தமிழால் ஏற்றகவி நானுரைக்க
புகழோங்கும் கிட்டங்கிப் பெருச்சாளி வாகனர்க்கு
அருளோங்கு பொன்னூஞ்சல் அழகுபா நான்பாட
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடிரோ பொன்னூஞ்சல்

03. அரையில் உரிபோர்த்த ஆதிசிவன் தன்மகனே
திரைகடல் வாசவனின் சிந்தை மகிழ்மருகா
கரையிலே வந்தமர்ந்த கணபதியே உன்மகிமை
உரைக்கின்றேன் செந்தமிழால் உத்தமனே நீகேட்டு
விட்ட இடம்தப்பாமல் விளைவொன்றும் நேராமல்
தொட்டபேனா முனையால் தொடர்ந்தெழுது என்றுரைக்க
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடிரோ பொன்னூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பொங்கல் அவல், கடலை பூரித்து உண்பவனே
கங்கையணி சிவனின் கற்கண்டுப் புத்திரனே
செங்கரத்தில் மோதகத்தை திருப்தியாய்க் கொண்டவனே
தும்பிக்கை நாயகனே துணைநீதா னென்று சொல்லி
நம்பிக்கை கொண்டோரின் நாவில் குடியிருந்து
அம்பிகையின் தன்மகனே அருட்பாக்கள் நீகேட்க
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்

05. சேனைக்குடியிருப்பு சிறப்பு அடைவதற்கும்
ஏனைய மக்களெமை என்றும் மதிப்பிற்கும்
வானுயர் கோயிலிலே வந்துகுடி கொண்டிருக்கும்
பானை வயிற்றோனே பணிந்தோர்க்கருள்பவனே
ஆனைமுகத்தோனே அனைவரையும் காப்பவனே
மானீன்ற பூங்கொடிமுன் வந்துபயம் தந்தவனே
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்

06. செல்வக் கணபதியே சிந்தை நிறையருளே
எல்லையில்லாச் செல்வம் என்றும் அளிப்பவனே
நல்ல மனமறிந்து நலமருளும் வல்லவனே
எல்லோரும் ஒன்றென்று எப்போதும் காப்பவனே
கல்லாய் இருந்தாலும் கருணைப் பெருங்கடலே
சொல்லுக்கு வல்லவனே சுகமனைத்தும் எமக்கருள
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. சுற்றிவரச் செந்நெல் சூழ்ந்த விளைபூமி
வற்றாத வாவி வாசமுள்ள தாமரையும்
அற்றுமன ஆசைவிட்டு அடிபணியும் மெய்யடியார்
பற்றோடு உன்நாமம் பகரும் தமிழர் குலம்
சுற்றமுடன் வாழ சுகமனைத்தும் நீயருள
பொன்னான ஆலயத்தில் பொக்கிஷமாய் வீற்றிருக்க
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்

08. கசிந்து மனமுருகிக் கண்ணீர் சொரிவோர்க்கு
இசைந்து மனமிரங்கி இன்பமுடன் சொர்ப்பனத்தில்
அடியவராய்த் தோன்றி அஞ்சாதே என்றுரைத்து
படிப்படியாய் வினைகளையும் பார்பதியாள் மூத்தவனே
விடியுமுன் உன்னடிக்கே விரியா மலர் சாத்தி
அடிபணியுமன்பர்க்கு அருள்வழங்க வேண்டுமென்று
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்

09. கற்பகப் பிள்ளையாரே கல்விக்கு வித்தகனே
நற்பேரருளும் நடனவிநாயகனே
பற்றோடு உன்பாதம் பணிவோர்க்கு மனமறிந்து
கற்பனையில்கூட கனவிலுறைபவனே
சேற்றிலே தாமரை சிறந்து விளங்குகின்ற
ஆற்றோரம் வீற்றிருந்து அருள் மழைதான் பொழிய
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தூங்கக்கரிமுகனே துணை நீதான் என்போர்க்கு
ஏக்கம் தனைப்போக்கும் எங்கள் குலதேசிகனே
தாங்கொணாத் துன்பம் தலைக்குமேல் வந்தாலும்
பங்கம் பலகண்டு பலதிசையும் அலைந்தாலும்
அத்தனையும் நீக்க அருட்கடலே இங்குவந்து
வித்தகனே அடியார் விருப்பம்போல் அருள்வழங்க
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்

11. இன்னல் பலகளைந்தாய் இடர்கள் பல நீக்கிவைத்தாய்
என்னாளும் இன்பம் எண்ணம்போல் நீயளித்தாய்
உந்தனருளாலே ஊர்மெச்ச வாழ்வளித்த
அன்பே அருட்கடலே ஆறுமுகன் சோதரனே
என்றென்றும் உன்னடிக்கே இனிதே பணிபுரியும்
அன்பு கொண்டோர்தமக்கு அருள்புரியவேண்டுமென்று
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்

12. தேசம் செழிக்க செகமெல்லாம் தான்செழிக்க
பாசமுடன் உழவர் பலபேருந்தான் செழிக்க
நேசமுள்ள மக்கள் நினைவிலே நீ செழிக்க
ஆசையுடன் உன் பாதம் அணுகுவோர் தான்செழிக்க
திசை எட்டும் தமிழர் சிறப்பாகத் தான் செழிக்க
ஓசையுடன் உன்நாமம் உரைப்போரும் தான்செழிக்க
அன்போடு கிட்டங்கி அழகுபதி வந்தமர்ந்த
ஆனைமுகத்தோனே ஆடீரோ பொன்னூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனைப் பாடல்கள்

அங்குசனே ஆனைமுகா ஓம் கணபதி ஓம்
அருட்கண்ணால் பாருமையா ஓம் கணபதி ஓம்

ஆலயத்தில் முன்னமரும் ஓம் கணபதி ஓம்
ஆயகலை நாயகனே ஓம் கணபதி ஓம்

இல்லத்தில் முதல் விளக்காய் ஓம் கணபதி ஓம்
இருந்தருள வேண்டுமையா ஓம் கணபதி ஓம்

ஈன்றவர்க்கும் முதல்பூசை ஓம் கணபதி ஓம்
இன்பமுடன் பெற்றவனே ஓம் கணபதி ஓம்

உன்னருளால் நற்கவிதை ஓம் கணபதி ஓம்
உகந்து மனமீந்திடுவாய் ஓம் கணபதி ஓம்

ஊழ்வினையும் வெல்வதற்கு ஓம் கணபதி ஓம்
உன்னருளே போதுமையா ஓம் கணபதி ஓம்

எள்ளுக்குள் எண்ணையென ஓம் கணபதி ஓம்
எங்கும் நிறை பரம்பொருளே ஓம் கணபதி ஓம்

ஏழ்பிறப்பும் வினையறுக்கும் ஓம் கணபதி ஓம்
எங்கள் குல தெய்வம் நீ ஓம் கணபதி ஓம்

ஐங்கரனே அன்புருவே ஓம் கணபதி ஓம்
அன்னைசக்தி தன்மகனே ஓம் கணபதி ஓம்

ஒரு மலரை உன்னடிக்கே ஓம் கணபதி ஓம்
உளமகிழ்ந்து சாத்திவிட்டால் ஓம் கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரத் துட்பொருளே ஓம் கணபதி ஓம்
ஔவை சொன்ன அகவல் கேட்டு ஓம் கணபதி ஓம்

அருள் கொடுத்த தெய்வமே நீ ஓம் கணபதி ஓம்
கலைஞானம் எமக்களிக்க ஓம் கணபதி ஓம்

கருப்பொருளே வாருமையா ஓம் கணபதி ஓம்
காலையிலே உன்னடியை ஓம் கணபதி ஓம்

கருத்தோடு நாம்பணிவோம் ஓம் கணபதி ஓம்
கிட்டாத பெருஞ்செல்வம் ஓம் கணபதி ஓம்

கிடைக்க மனமிரங்குமையா ஓம் கணபதி ஓம்
கீர்த்திபல எமக்கருள ஓம் கணபதி ஓம்

கிட்டங்கிப் பதியமர்ந்தாய் ஓம் கணபதி ஓம்
குணபதியே குணக்குன்றே ஓம் கணபதி ஓம்

குஞ்சரத்து ஐங்கரனே ஓம் கணபதி ஓம்
கூடிநாங்கள் ஒற்றுமையாய் ஓம் கணபதி ஓம்

கூறுகின்றோம் உன்புகழை ஓம் கணபதி ஓம்
கெஞ்சுகின்றோம் அருள்வேண்டி ஓம் கணபதி ஓம்

கேட்டவரம் தாருமையா ஓம் கணபதி ஓம்
கேசகனார் தன் மருகா ஓம் கணபதி ஓம்

கெதியில்வர வேண்டுமையா ஓம் கணபதி ஓம்
கையசைத்துக் கருணைகாட்டி ஓம் கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தருள வாருமையா ஓம் கணபதி ஓம்
கொடுக்கும் மனம் கொண்டவனே ஓம் கணபதி ஓம்

கொஞ்சுதமிழ்ச் செல்வனே நீ ஓம் கணபதி ஓம்
கோடிமுறை உனைப்பணிந்தேன் ஓம் கணபதி ஓம்

கோதையுமை பாலகனே ஓம் கணபதி ஓம்
கௌரவமாய் அமர்ந்திருக்கும் ஓம் கணபதி ஓம்
கஜமுகனே இரங்குமையா ஓம் கணபதி ஓம்

****************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் தனிப்பாடல்

எங்கும் நிறைந்த பரம்பொருளே
எதற்கும் மூத்த முழுமுதலே
சங்கத் தமிழுக் கதிபதியே
சான்றோர் போற்றும் தத்துவனே – எங்கும்

கங்கைணயிந்த சிவன்கூட
கருத்தில் உன்னை மறந்தாலும்
தங்கு தடைகள் பலகாட்டும்
தந்தி முகத்து ஐங்கரனே – எங்கும்

பாரதக் கதையைப் புனைவதற்கு
பணிவாய் விஷாயர் கேட்டதற்கு
காரணத்தோடு கொம்புடைத்து
கதையை எழுதிய காரணனே – எங்கும்

உன்னை மனதில் நினையார்க்கு
ஒரு நாளேனும் விடியாது
எண்ணிய கருமம் முடியாது
என்றும் வாழ்வு மலராது – எங்கும்

***************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கியோனின் இதர வெளியீடுகள்...

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல், வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாகங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பத்து, மயானபத்து.

04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.

06. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி – 01.

07. கிட்டங்கிப்பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி – 02.

11. தசாவதாரம் கும்மிப் பாடல்கள்.

12. கண்ணப்பநாயனார் கும்மிப் பாடல்கள்.

13. காரைக்காலம்மையார் கும்மிப்பாடல்கள்.

14. சிந்தாயாத்திரைப் பிள்ளையார் வரலாற்றுப் பத்து சீர்பாதகுல வரலாறுக் கும்மி.

15. தசாவதாரப் பத்து, வேல்முருகன் காவடிப் பாடல்.

16. தாந்தாமலை முருகன் வழிநடைப்பத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிட்டங்கிப் பிள்ளையார் ஆலயம் - சேனைக்குடியிருப்பு

கோல்டன் அச்சகம், கல்முனை. 067-2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org